பக்கங்கள் 6 விலை சதம் 40 ★★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 ஆடி 11 ஷஃபான்: 9 இதழ்: 165

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 26-7-77

## இளைஞர்களுக்கு 'சிவா'வின் கோரிக்கை!

யாழ்ப்பாணம், செவ்.

இளைஞர்கள் உணர்ச்சி வசப்பட்டு வன்செயல்களில் ஈடுபடாது அமைதியாக இருங்கள். மகத்தான வெற்றியைப் பெற்றுள்ள நாம் அமைதியான முறையில் எமது லட்சியத்துக்காக உழைப்போம்.

தமிழர்விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் திரு. மு.சிவசிதம்பரம் 'ஈழநாடு' மூலம் இளைஞர்களுக்கு இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார்.

தேர்தலையடுத்து நமது பிரதேசங்கள் சிலவற்றிலும் சிலர் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டாலும் இப்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுவிட்டது. பொதுவாக இப்போது வடபகுதி எங்கும் அமைதியே நிலவிய போதும் சிலசில இடங்களில் இளைஞர்கள் உணர்ச்சிவசப்பட்டு சில செயல்களில் ஈடுபடுவதாக நான் அறிகிறேன்.

மகத்தான வெற்றியைப் பெற்றுள்ள நாம் நமது லட்சியத்துக்காக அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் செயற்படுவோம். இளைஞர்கள் சிலர் உணர்ச்சி வசப்பட்டு வன்செயல்களில் ஈடுபடின் அது எதிர்சக்திகளுக்கு வாய்ப்பளிப்பதாக அமையும். இந்த நிலைமைக்கு இடமளிக்காமல் எமது இளைஞர் பொறுமையாகவும்

(6-ம் பக்கம் பார்க்க)

# புதிய முறையில் உணவுப் பொருள்கள் விநியோகம்

## உடனடி நடவடிக்கைக்கு மூவர் குழு நியமனம்

கொழும்பு, திங்கள்

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதே தனது முதற் கடமை எனக்கருதி அரசு தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கும் அதே நேரத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பாவனையாளருக்கு விநியோகிக்கப்படும் உணவுப் பொருள்கள் சமமாக, சீராகக் கிடைக்கவேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் முதல் நடவடிக்கையை உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சர் இப்பொழுது மேற்கொண்டுள்ளார்.

நாடு முழுவதும் உணவுப் பொருட்களை துரிதமாக விநியோகம் செய்வதைக் கவனிக்கும்பொருட்டு சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழுக்களை நியமிக்குமாறு புதிய உணவுக் கூட்டுறவு அமைச்சர் திரு. எஸ். பி. ஹேரத் உத்தரவிட்டுள்ளார்.

திரு எஸ். பி. ஹேரத் இன்று தமது அமைச்சுக்குச் சென்று கடமைகளைப்பொறுப்பேற்ற பின்னர் மேற்கண்ட உத்தரவை விடுத்தார்.

கூட்டுறவுச் சங்கங்களில் உத்தேச குழுக்களை அந்தந்தப் பகுதி எம். பி. க்களின் ஆலோசனையுடன் நியமிக்குமாறும் திரு. எஸ். பி. ஹேரத் பணித்துள்ளார்.

இக்குழுக்களை உடன் நியமிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சகல கூட்டுறவு உதவி ஆணையாளர்களையும் பணிக்குமாறும் அமைச்சர் கூட்டுறவு ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

உணவுப்பொருள் விநியோகம் புதிய முறையில் நடைபெறவேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரும் பிரதி அமைச்சர் திரு. ராஜ்கருணாவும் ஊழியர்களால் அன்புடன் வரவேற்கப்பட்டனர். (இ)

## மன்னார் எம். பி. பற்றிய செய்தி 'வதந்தி'!

யாழ்ப்பாணம், செவ்.

மன்னார்த்தொகுதி தமிழர் விடுதலைக்கூட்டணி தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. சூசைதாசன்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதாக வடபகுதியில் பரவிய செய்தி வெறும் வதந்தியென்று தெரிய வருகின்றது. இச்செய்தி தொடர்பாக விசாரித்ததில் அவ்வாறு எதுவித சம்பவமும் நிகழவில்லையென்று நம்பகமாக அறிய முடிந்தது. இதுதொடர்பாக கிளிநொச்சி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. ஆனந்தசங்கரியிடம் விசாரித்தபோது தாம் சூசைதாசனுடன் தொடர்புகொண்டு பேசிய

(6-ம் பக்கம் பார்க்க)

## இ. போ. சபை புதிய நிர்வாகம்

கொழும்பு, திங்கள்

இலங்கை போக்குவரத்துச் சபை மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இ போ. சபையின் புதிய தலைவராக திரு. விஜயசேகராவும் திரு. எஸ். ஜே. ஜி யாப்பா உபதலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். திரு. எக்ஸ் ரஞ்சித்சில்வா, ஜனாப் முகமத் மரிக்கார் பாவா, திரு. ஒள்காடி வீவேரா, திரு. சந்திரசேன டேவிட், திரு. நாபாலசிங்கம் ஆகியவர்கள் சபையின் ஏனைய உறுப்பினர்களாவர். திரு. மகிந்த இளப்பெருமா அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இ. போ. சபையின் பழைய நிர்வாகசபை பதவியிலிருந்து விலகிக்கொண்டதால் இப்புதியசபை நிறுவப்பட்டுள்ளது.

## "தமிழ்மொழி அரச மொழியாவதை தமிழ் மக்கள் விரும்புகின்றனர்"

கொடிகாமம், திங்கள்

"தமிழ்மக்கள், தமிழ் மொழி அரசகரும மொழியாக இருப்பதையே விரும்புகிறார்கள். தமிழ் மாணவர்கள் தமது உயர் கல்வி பறிபோவதைக் கண்டு மனம் கொதிக்கிறார்கள். இந்நிலையில் சிங்கள ஆட்சியினின்றும் விடுதலைபெறவேண்டி அதற்கான அதிகாரத்தைத் தமிழ்மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அளித்துவிட்டனர். தமிழ் மக்களின் விருப்பத்தை நிறைவேற்றத் தமிழர் விடுதலைக் கூட்டணி தயங்காது."

இவ்வாறு சாவகச்சேரித் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் சாவகச்சேரியில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார் திரு. வி. என். நவரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"தமிழ் மக்கள் தங்களது பண்பாடு, கலை கலாச்சாரங்களைப் பாதுகாக்க விரும்புகிறார்கள். தமிழ்மொழி வளர்ச்சியையும், அது அரசமொழியாக இருப்பதையும் விரும்புகிறார்கள். தமிழ் மாணவர்கள் உயர் கல்வி, வேலைவாய்ப்பு ஆகியன பறிபோவதையும் தமிழ் உயிர்கள் காரணமின்றிப் பறிக்கப்படுவதையும் எதிர்க்கிறார்கள்.

"இன பேதம் கட்டவிழ்க்கப்படுவதையும், சிங்களக் குடியேற்றத்தையும் முற்றாக வெறுக்கிறார்கள். அடக்குமுறைகளையும் அட்டூழியங்

(6-ம் பக்கம் பார்க்க)

## எம். ஜி. ஆர். அரசின் முதலாவது 'பட்ஜட்'

### வறிய பெண்களுக்கு விசேஷ திட்டம்

சென்னை, திங்.

மக்கள்திலகம் எம். ஜி. ராமச்சந்திரன் தலைமையிலான அ. இ. அ. தி. மு. கழக அரசின் முதலாவது நிதிநிலை அறிக்கை இன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

நிதிஅமைச்சர் திரு. நாஞ்சில் மனோகரன் நிதிநிலை அறிக்கையை இன்று சட்டப் பேரவையில் சமர்ப்பித்து உரைநிகழ்த்தினார். நிதிநிலை அறிக்கை 40 பக்கங்களில் தமிழில் அச்சடிக்கப்பட்டிருந்தது.

புதிய அரசு பதவிஏற்று ஒரு திங்கள்கூட ஆகவில்லை என்று கூறிய அமைச்சர் இந்த ஆண்டின் எஞ்சியுள்ள காலத்திற்கான இந்த வரவுசெலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றார். தமிழ்நாட்டின் பல்வேறு அபிவிருத்திகளுக்குமான குறுகியகாலத்திட்டங்களை வெளியிட்ட நிதியமைச்சர் பெண்களுக்கென விசேட திட்டம் ஒன்றையும் அறிவித்தார். 16 வயதுக்கும் 30 வயதுக்கும் உட்பட்ட வறிய பெண்களுக்கு சுருக்கெழுத்து - தட்

(6-ம் பக்கம் பார்க்க)

ஆள் மாறாட்டம்:

## கைதான எட்டுப்பேர் பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணத் தொகுதியில் உள்ள சில வாக்களிப்பு நிலையங்களில், ஆள்மாறாட்டம் செய்ததாக, றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த 8 பேர் நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் நீதவான் திரு. நவரத்தினம் முன்னிலையில், இவர்கள் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

21-ம் தேதி கைதுசெய்யப்பட்ட இவர்கள், மறுநாள் காலை நீதிபதிமுன் ஆஜர்செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

நேற்றுக் காலை இவர்கள் நீதிபதிமுன் ஆஜர்செய்யப்பட்டபோது தலா 1000 ரூபா சரீரப்பிணையில் செல்ல நீதிபதி அனுமதித்து அடுத்த மாதம் 4ம் தேதி ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி ஏ. அன்ரனி ஆஜரானார். (க)

## கலவரப்பகுதிகளில் அமைதி திரும்பியது

### ஊரடங்கு நேரம் குறைப்பு

கொழும்பு, திங்.

தேர்தல் முடிவடைந்தவுடன் நாட்டின் பல பாகங்களிலும் ஏற்பட்ட வன்செயல்கள் யாவும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு சில பகுதிகளில் அமுலுக்கு கொ

(6-ம் பக்கம் பார்க்க)

**மணிவாக்கு**

உண்மையாகச் சேவை புரிபவனே நல்ல கிருகஸ்தன். அவன் பதில் நன்மை கருதாது கொடுத்துக்கொண்டே வாழ்வான். — காந்திமகான்

ஈழநாடு
THE BELANAADU

# வாழ்க்கைச் செலவு!

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்குப் புதிய அரசாங்கம் முக்கியத்துவம் கொடுத்திருப்பது மட்டுமல்ல உடனடியாக இதுசம்பந்தமாக நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்வந்துள்ளது எதிர்காலத்தைப்பற்றி நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது.

கடந்தகாலங்களில் ஆட்சி பீடத்துக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் வாழ்க்கைச் செலவைக் குறைக்கவும் வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்கவும் உறுதியளித்தே பதவிக்கு வந்தன.

ஆட்சிபீடத்திலமர்ந்ததும் முன்னைய அரசாங்கம் செய்த தவறுகளைப்பற்றிப் பேசியே காலம்கடத்தினரே தவிர ஆக்கபூர்வமான செயல்திட்டங்கள் எதையும் வகுத்துச் செயல்படுத்தவில்லை.

வேறுபட்ட கொள்கைகளைக் கொண்ட கட்சிகள் ஒன்றுசேர்ந்து ஐக்கியமுன்னணி அரசாங்கம அமைத்ததாலோஎன்னவோ அமைச்சரவைக்குள் கூட்டுப்பொறுப்பும் ஒருமைப்பாடும் நிலவுவது கஷ்டமாயிருந்தது.

இதேநிலை 1965ம் ஆண்டிலிருந்து 1970-ம் ஆண்டு வரை ஆட்சிபீடத்திலிருந்த திரு. டட்லிசேனநாயகாவின் தேசிய அரசாங்கத்திலும் நிலவியது.

இப்போது திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாதலைமையில் ஆட்சிபீடத்துக்கு வந்துள்ள ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கம் மிகப்பெரும்பான்மைப்பலத்துடன் எதையும் செய்யக்கூடிய துணிவைப் பெற்றுள்ள தனிக் கட்சியாக வந்துள்ளது.

ஆனாலும் ஆற்றலும் அனுபவமும் நிறைந்த பிரதமர் ஜே. ஆர். தெளிவான திட்டங்களையும் கொண்டிருக்கிறார். இத்திட்டங்களைச் செயல்படுத்துவார் என்பதற்கு அறிகுறிகள் தோன்றத் தொடங்கியிருக்கின்றன.

வாழ்க்கைச்செலவுப் பளுவும் வேலையின்மையுமே முன்னைய அரசாங்கத்தின் படுதோல்விக்குக் காரணம் என்பதை புதிய அரசாங்கம் நன்குணர்ந்துள்ளது.

இதனால்தான் அமைச்சரவை பதவியேற்றதுமே முதல் கூட்டத்திலேயே வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதற்கென மந்திரி சபை உப குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

வாழ்க்கைச் செலவு உயர்வுக்கான காரணங்கள்பற்றியும் மந்திரிசபை ஆராய்ந்திருக்கிறது.

'பீக்ஸ்' எனப்படும் அந்நியச் செலாவணிச் சான்றிதழ் திட்டமும் இதற்கொரு காரணமென்பதையும் அது கருத்தில் கொண்டிருக்கிறது.

உணவுப் பொருள் உற்பத்தி, உணவுப் பொருள் விநியோகம், உணவும் பொருள் இறக்குமதி ஆகிய மூன்று அம்சங்களும் வாழ்க்கைச் செலவுக்கு முக்கிய காரணங்களாகும்.

இவைகளில் அரசாங்கம் கவனம் செலுத்த முற்பட்டிருப்பது பயனளிக்கக் கூடியது.

அமைச்சர்கள் தீர்மானம் எடுத்தால்மட்டும் போதாது அவற்றைச் செயல்படுத்த வேண்டியவர்கள். நாட்டுக்கும் மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் விசுவாசமாகத் தங்கள்கடமையைப் பொறுப்புடன் செய்வதில் தான் எல்லாம் தங்கியுள்ளது.

## 30 ஆண்டுகளின் பின் மீண்டும் எம்.பி யானார்!

கொழும்பு, திங்கள்

நுவரெலியா- மஸ்கேலிய தொகுதியில் தெரிவு செய்யப்பட்ட திரு. எஸ். தொண்டமான் 30 வருடத்திற்குப்பின் மீண்டும் எம். பியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

1947-ம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் திரு. எஸ். தொண்டமான் முதன் முதலில் எம். பியாகத் தெரிவு செய்யப்பட்டார். அப்பொழுது அவர் இலங்கை இந்தியர் காங்கிரஸ் பிரதிநிதியாக இருந்தார்.

இன்று திரு. எஸ். தொண்டமான் தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஒரு அங்கமான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திரு. எஸ் தொண்டமான் 1956-ம் ஆண்டுமுதல் 1970ம் ஆண்டுவரை சில தடவைகள் நியமன எம். பியாக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

## சமதர்ம தமிழீழத்தில் இந்து-முஸ்லிம் ஒற்றுமை

### முஸ்லிம் முற்போக்குஇயக்கத்தலைவர் அறிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

இன - மத பேதமற்ற சமதர்ம தமிழ் ஈழம் அமையும் முயற்சியில் இந்து - முஸ்லிம் ஒற்றுமை மலரட்டும்'' என்று அகில இலங்கை முஸ்லிம் முன்னேற்ற இயக்கத் தலைவர் ஜனாப். ஏ. ஏ. எம். ஜலீல் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுவதாவது:

தமிழ் ஈழம் காணும் நோக்கில் ஒன்றிணைந்த தமிழினத்தின் இலட்சியப் பயணப் பாதையில் முக்கிய திருப்பு முனையாக அமைந்துவிட்ட இத்தேர்தலில் யாழ். வாழ் முஸ்லிம்களில் பலர் கூட்டணிக்கு ஒத்துழைப்பு நல்கினர். யாழ் தொகுதியின் வாக்காளர்களில், முஸ்லிம் அல்லாதோர் பலர் வழிதவறி நின்றமை போலவே முஸ்லிம்களுள்ளும் சிலர் எதிர்காலத்தை அநுமானிக்கச் சக்தியற்றவர்களாய்த் திசை திருப்பப்பட்டிருந்தனர் என்பதுவும் மறுக்கப்படமுடியாததே. எனினும் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் இலட்சியப் பயணத்தில் எமக்குள்ள உண்மையான - முரண்பாடற்ற - ஆக்மார்த்த உணர்வுடன் கலந்துவிட்ட-வேகமும் ஆவேசமும் மிக்க ஆர்வமானது.

''இச்சிறுபான்மை முஸ்லிம்களின் மன உடைவுக்குக் காரணமாகி விடாவண்ணம் எமது பயணத்தின் குறிக்கோளிலுள்ள உண்மைத் தத்துவத்தை உணர்த்தி, அன்புடனும் ஆதரவுடனும் கைகொடுத்து அணைத்தவாறு அவர்களையும் எமது பயணத்துடன் இணைக்க உதவட்டும்''

## சர்வஜன வாக்கெடுப்புக்கு மக்கள் அளித்ததீர்ப்பு

### குமார் பொன்னம்பலம் அறிக்கை

யாழ்ப்பாணம், செவ்

''நடந்துமுடிந்த பொதுத் தேர்தலில் எனக்கு வெற்றி கிடைக்காதபோதிலும், நான் கொண்ட இலட்சியப் பாதையில் தொடர்ந்து செல்வேன். தேர்தல் பிரசாரங்களில் நான் வாக்குறுதியளித்தபடி, யாழ். தொகுதியினதும், மக்களின் தும் பொருளாதார முன்னேற்றத்துக்காக நான் இயன்றளவு பாடுபடுவேன்'' என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

''மிகக்குறுகிய காலமான 50 நாள் பிரசாரத்தில் எனக்கு வாக்களித்த 7 ஆயிரம் யாழ்ப்பாணத்தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு முதலில் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். ஜனநாயக முறையில், எனக்குப் பூரண நம்பிக்கை இருப்பதால் மக்களுடைய தீர்ப்பை நான் முழுமனதுடன் ஏற்றுக் கொள்கின்றேன். இலங்கை முழுவதிலும் சுயேச்சையாகப் போட்டியிட்டவர்களுக்குள் எனக்கு ஐந்தாவது பெரும்பான்மையான வாக்குகள் கிடைத்தமை பற்றி நான் சந்தோஷமடைகின்றேன். அதுவும் எனது முதலாவது முயற்சியில் கிடைத்தமை பற்றி அகமகிழ்கின்றேன்.

''சர்வஜன வாக்கெடுப்பு என்ற கோஷத்திற்கு பெரு வெற்றி கிடைத்திருப்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். பெரும்தொகையான மக்கள் கூட்டணியினருக்கு வாக்களித்து அவர்களை அதிக பெரும் தொகையான வாக்குகளால் தெரிவுசெய்திருக்கின்றனர். வடபகுதியைப் பொறுத்தளவில் கூட்டணியினர் எல்லாத்தொகுதியிலும் வெற்றியீட்டியிருக்கின்றார்கள். தேர்தல் முடிவுகளில் இருந்து முஸ்லீம் மக்



கள் இலங்கையைப் பிரிப்பதை அறவே விரும்பவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. அதே சமயம் தமிழ் பேசும் மக்களில் கிட்டத்தட்ட 55 வீத மக்கள் கூட்டணியினருக்கு வாக்களித்துள்ளார்கள். கூட்டணியினரின் இலட்சியமான தமிழ் நாட்டை அமைப்பதற்கு, எதுவித தங்குதடையுமில்லாத பாதை ஒன்று அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

''ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், இலங்கையில் இருக்கும் கட்சிகள் மத்தியில் தமிழர் பிரச்னைகள் குறித்து, அக்கட்சிகளின் உண்மையான நோக்கங்களை அறிவதற்காகவாவது உடனடியாக ஒரு வட்டமேசை மகாநாட்டைக் கூட்டும் என்று நம்புகின்றேன்.

''தமிழ் பேசும் மாணவர் மத்தியில் விரக்தியை ஏற்படுத்தியுள்ள தரப்படுத்தலை உடனடியாகத் தீர்க்கும்படி ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை வேண்டுகின்றேன்.''

(கூ)

## சாதனை ஏற்படுத்தும் 19 வயது எம். பி.

கொழும்பு, திங்கள்

இலங்கைப் பாராளுமன்றச் சரித்திரத்தில் முதல் தடவையாக 19 வயது இளைஞர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஹேவாஹெட்ட தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி அபேட்சகராகப் போட்டியிட்டு வெற்றிபெற்ற திரு. அனுரா டானியலே அந்த இளம் எம். பி.யாகும். இவருடைய தந்தையான திரு. ஏ. டானியல் அப்புஹாமி அத்தொகுதியில் எம். பி.யாக 1965ம் ஆண்டு தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

இரத்மலானைத் தொகுதியில் தெரிவுசெய்யப்பட்ட திரு. லலித் அத்துலத்முதலியின் தந்தையாரான திரு. டி. டி. அத்துலத்முதலி சட்டசபையில் மத்துகமத் தொகுதி எம். பி.யாக இருந்தார்.

டெடிகமத் தொகுதியில் தெரிவுசெய்யப்பட்ட திரு. நிசங்கா விஜயரத்னவின் தந்தை முன்பு கேகாலைத் தொகுதி எம். பி.யாக இருந்தார். பின்னர் அவர் ஒரு செனேட்டராகவும் சடமையாற்றினார்.

நுவரெலியாத் தொகுதியில் தெரிவு செய்யப்பட்ட திரு. காமினி திஸநாயக்காவின் தந்தையான திரு அன்ரூ திஸநாயக்கா, 1956-ம் ஆண்டு நடந்ததேர்தலில், நுவரெலியா எம். பி.யாத்க தெரிவு செய்யப்பட்டார். அவா அத்தேர்தலில், சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிட்டார்.

பெலியத்தைத் தொகுதி எம். பி. யான டாக்டர் ரஞ்சித் அத்தபத்துவின் தந்தை திரு. டி. பி. அத்தபாத்து, 1965-ம் ஆண்டுத் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தார்.

## அதிகப்படி வாக்குகள் வரிசையில்

கொழும்பு, திங்கள்

ஐக்கிய தேசியக்கட்சி உப தலைவர் திரு. ஆர். பிரேமதாசா ஆகக்கூடுதலான மேலதிக வாக்குகள் பெற்றுள்ளார். இவர் 35,156 மேலதிக வாக்குகளை பெற்றுள்ளார்.

தனித் தொகுதி யொன்றில், கூடுதல் மேலதிகவாக்குகளை பெற்றவர், தமிழர் விடுதலை கூட்டணி செயல் அதிபர் திரு. எம். சிவசிதம்பரம். வார் இவர் நல்லூர்த் தொகுதியில் 28,858 மேலதிக வாக்குகளை பெற்றுள்ளார்.

தமிழர் விடுதலை கூட்டணியின் மற்றொரு செயலதிபரான திரு. ஏ. அமிர்தலிங்கம், காங்கேசன்துறை தொகுதியில் 25,833 மேலதிக வாக்குகளை பெற்றுள்ளார். தனித் தொகுதியொன்றில், இரண்டாவதாக கூடுதல் மேலதிக வாக்குகளை இவர் பெற்றுள்ளார்.

மூன்று உறுப்பினர் தொகுதியான கொழும்பு மத்தியில், மூன்றாவது எம். பியாக தெரிவு செய்யப்பட்ட சுதந்திரக்கட்சி எம். பி. திரு. கலிம் ஜசாக்., 26,818 மேலதிக வாக்குகளை பெற்றுள்ளார். (க)

மூன்று உறுப்பினர் தொகுதியான நுவரேலியா, மஸ்கேலியா தொகுதியில் திரு. எஸ். தொண்டமான் 32,717 மேலதிக வாக்குகளை பெற்றுள்ளார்.

## பழிவாங்கலுக்கு இடமில்லை

### பொது நிர்வாக அமைச்சர்

கொழும்பு, திங்கள்

இன்றைய ஆட்சியில் பழிவாங்கலுக்கோ அநீதிக்கோ இடமளிக்கப்படமாட்டாது என்று பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரம கூறினார்.

திரு. ஜெயவிக்கிரம இன்று தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டபோது ஊழியர்கள் மத்தியில் உரையாற்றினார்.

எவர்மீதும் அநீதி இழைக்கப்பட்டால் அதுபற்றி பூரண விசாரணை நடத்தப்படும் என்றும் திரு. ஜெயவிக்கிரம கூறினார்.

90 வீத மக்களால் தெரிவு செய்யப்பட்ட புதிய அரசுக்கு தமது அமைச்சின்கீழ் உள்ள 4 லட்சம் ஊழியர்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அவர் கூறினார்.

(இ)

## தெரிவான உறவினர்கள்

கொழும்பு, திங்கள்

இலங்கை தேசிய அரசு பேரவையின் சரித்திரத்தில் முதல் தடவையாக, தாயும் மகனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்தனகலை தொகுதியில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும், நுவரேலியா மஸ்கேலியா -தொகுதியில், அவரது மகன் திரு. அனுரா பண்டாரநாயக்காவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோல் தந்தையும், மகனும், தேசிய அரசுபேரவைக்கு முதல் தடவையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். களனி தொகுதியில் திரு. சிறில் மத்தியூசும், கொலன்னாவை தொகுதியில் அவரது மகனை திரு. நந்தா மத்தியூசும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## அமைச்சரின் கோரிக்கை

கொழும்பு, திங்கள்

வெற்றிக் கொண்டாட்டங்களுக்காக, பொது வாகனங்களை பாவிப்பதை கைவிடுமாறு போக்குவரத்து அமைச்சர் திரு. எம். எம். முகமட் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மகிழ்ச்சியின் உச்சக்கட்டத்தில் மக்கள், பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவித்து வருகிறார்கள் என்றும், இப்படியான நடவடிக்கைகளை கைவிடுமாறு பணிவான வேண்டுகோள் விடுவதாகவும் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது: பொதுத் தேர்தலுக்கு முன்னர், பஸ்கள் பழுதடைந்த நிலையில் இருந்ததென்பதை நான் அறிவேன்.

மீண்டும் பஸ்சேவையை வழக்கமான நிலைமைக்கு

(6-ம் பக்கம் பார்க்க)

# 6-வதுஇந்தியஜனுதிபதியாக சஞ்சீவரெட்டி பதவிஏற்ருர்

## போட்டியின்றித் தெரிவான முதல் ராஷ்டிரபதி

(புதுடில்லி)

**இந்தியாவின் 6வது ஜனுதிபதியாக போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்ட திரு. நீலன் சஞ்சீவரெட்டி நேற்று இந்திய பிரதம நீதியரசரின் முன்னிலேயில் சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றுக் கொண்டார்.**

நேற்றுக் காலே 10.15 மணிக்கு இந்திய பாராளு மன்ற மத்திய மண்டபத்தில் நடைபெற்ற விஷேட வைபவத்தில் திரு. ரெட்டி ஜனுதிபதியாகப் பதவி ஏற்றுக் கொண்டார்.

பிரதம மந்திரி திரு. மொரார்ஜிதேசாய், தற்காலிக ஜனுதிபதி திரு. ஜட்டி லோக சபை சபாநாயகர் திரு. ஹெக்கடே, துணை சபாநாயகர், ராஜ்யசபை தலைவர் அமைச்சர்கள், எம்.பிக்கள், வெளிநாட்டு ராஜதந்திரிகள் ஆகியோரும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்.


அவ்வைபவத்தை ஒட்டி ஜனுதிபதிக்கு மரியாதை தெரிவிக்கு முகமாக 21 பீரங்கிக் குண்டுகள் தீர்க்கப்பட்டன. பதவி ஏற்பு வைபவம் முடிவடைந்ததும் திறந்த காரில் ஜனுதிபதி ராஷ்டிரபதிபவனுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

ராஷ்டிரபதி பவனுக்கு முன் முப்படைகளினதும் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்ட ஜனுதிபதி பின்னர் ராஷ்டிரபதிபவனுக்குச்சென்று தமது கடமைகளைப் பொறுப் பேற்றுக்கொண்டார்.

தேசபிதா மகாத்மா காந்தியின் சமாதிக்கும் திரு. ரெட்டி அஞ்சலி செலுத்தினுர்.

### முதல் ஜனுதிபதி

சகல கட்சிகளாலும் தெரிவு செய்யப்பட்டது மட்டுமல்ல, ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது இந்திய ஜனபதி திரு. ரெட்டி என்பது குறிப்பிடத்தக்கது. (இ)



**வேலர்:** ஒருநாள் நான் நல்ல பசியோடு நடந்துபோகும் போது சோளகக்காற்று என்னைத் தள்ளி விழுத்திப் போட்டுது... அப்போ சன்னதியானுக்கு ஒரு நேர்த்தி வைச்சனுன்... நேர்த்திக்குப் பலன் கிடைக்கப் போகுது போலே.

**மயிலர்:** என்ன நேர்த்தி அது.

**வேலர்:** சாப்பாட்டுச் சாமான்களின் விலைவாசி குறைஞ்சால் ஒரு பெரிய அன்னதானம் கொடுப்பதாக நினைச்சனுன்.

— சுந்தர்

# 14 எகிப்திய விமானங்களை லிபியர் சுட்டு விழ்த்தினர்

## போரை நிறுத்துமாறு எகிப்திய அதிபர் உத்தரவு

திரிப்பொலி, ஜுலை, 25

எகிப்தின் 14 விமானங்களை லிபியவீரர்கள் சுட்டு வீழ்த்தி விட்டார்கள் என்று லிபிய இராணுவ பீடம் அறிவித்துள்ள அதே வேளையில் லிபியாவின் ஆறு விமானங்களை எகிப்தியவீரர்கள் சுட்டு விழ்த்திவிட்டனர் என்று எகிப்திய இராணுவ பீடம் அறிவித்துளளது.

இதேவேளையில், லிபிய எல்லையில் சகல போர் நடவடிக்கைகளையும் நிறுத்துமாறு எகிப்திய அதிபர் ஜனுப் அன்வர் சதாத் உத்தரவிட்டுள்ளார்.

லிபிய அதிபர் கேணல் கடாபி, அல்ஜீரியஅதிபர் திரு. பொமீதியன் ஆகியோருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியதை அடுத்தே அதிபர் சதாத் மேற்கண்ட உத்தரவை விடுத்துள்ளார். (இ)

### தேர்தல் முடிவு: என். எம். கருத்து

கொழும்பு, திங்கள்

பொதுத்தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பை ஏற்றுக் கொள்கிறேம் என சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா தெரிவித்தார்

லங்கா சமசமாஜக் கட்சியின் அரசியல் பீடம் கட்சி தோல்வியுற்றதன் காரணங்களை விளக்கி அறிக்கை யொன்றை வெளியிடவிருப்பதாகவும் அவர் கூறினுர்.

# நல்லூர்- கேதீச்சரம் பஜனை பாதயாத்திரை

யாழ்ப்பாணம். செவ்.

ஆண்டுதோறும் நல்லூர் திவ்விய பதியிலிருந்து ஆரம்பமாகி பூநகரியூடாக கேதீச்சரத்துக்கு நிகழ்ந்து வரும் பாதயாத்திரை இன்று செவ்வாய்க் கிழமை மாலே நான்கு மணியளவில் ஆரம்பமாகும்.

பாதயாத்திரையில் நாட்டின் பலபாகங்களிலுமுள்ள சிவனடியார்கள் கலந்துகொள்வர். பாதயாத்திரை நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்திலிருந்து ஆரம்பமாகி நல்லூரில் வழிபாடாற்றிக்கொண்டு பருத்தித்துறைவீதி, கண்டி வீதி வழியாக யாத்திரையை நடத்துவர். நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆதீனத்தில் ஆரம்பித்து வைப்பார்கள்.

இப்பாதயாத்திரையின் சிறப்பு நிகழ்ச்சியாக நாயன்மார்கட்டு ஸ்ரீஇராஜராசேசுவரிஅம்பாள் ஆலயத்தில் திருஞான சம்பந்த சுவாமிகள் திருவவதாரத் திருவோடு பூசை முகத்தில் வைக்கப்பெற்று புராணபடனம் நிகழும். நான்கு தினம்வரை தொடர்ந்து நிகழும் இப்பாதயாத்திரை ஆங்காங்கு பஜனை புராணபடனம் விரிவுரைகளும் இடம் பெறும்.

# பாக். முன்னுள் மந்திரிகளுக்கு நாட்டை விட்டு வெளியேறத்தடை

## ஊழல் குற்றச்சாட்டுகளை கமிஷன் விசாரிக்கும்

இஸ்லாமாபாத், ஜுலை 25

பாகிஸ்தான முன்னுல் பிரதமர் ஜனுப் சுல்பிகார் அலி பூட்டோவின் மந்திரிசபையில் அங்கம் வகித்த மந்திரிகள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு இராணுவ அரசு தடைவிதித்துள்ளது.

நிர்வாக ஊழல்களுக்குப் பொறுப்பானவர்கள் என்று கருதப்படும் சில அமைச்சர்களுக்கும், வேறு பல உயர் அதிகாரிகளுக்குமே நாட்டைவிட்டு வெளியேற தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இவர்களது பெயர்ப்பட்டியல்கள் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்திற்கும் சகல விமானநிலையங்களுக்கும், துறைமுகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

ஊழல் குற்றச்சாட்டு சம்பந்தப்பட்டுள்ளவர்கள் மீது விரைவில் கமிஷன் விசாரணை நடைபெறும் என்றும் இராணுவ பீடம் அறிவித்துள்ளது.

### பொதுத்தேர்தல் நடவடிக்கை

எதிர்வரும் அக்டோபர் மாதத்தில் தேர்தலை நடத்துவதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறும் இராணுவ அரசு உயர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. (இ)

# தொழிற்சாலைகள் அரசுடமையாகாது

## லண்டனில் இந்திய அமைச்சர்

லண்டன், ஜுலை 25

இந்திய தனியார்தொழில் துறைகள் எதுவும் அரசுடமையாக்கப்படமாட்டாது என்று இந்திய கைத்தொழில் அமைச்சர் திரு. ஜோர்ஜ் பெர்ணண்டஸ் கூறியுள்ளார். லண்டனில் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினுர்.

ஜனதா ஆட்சியில் அரசாங்க தொழில்துறை சீர்கேடு அடைந்துள்ளது என்று கூறப்படுவதை மறுத்துரைத்த திரு. பெர்ணண்டஸ், தொழில் துறைகளில் மேலும் பல அபிவிருத்தி நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள இருப்பதாகவும் கூறினுர்.

ஏற்கனவே அரசுடமையாக்கப்பட்ட தொழிற்சாலைகளை திரும்பவும் தனியார் துறைகளிடம் ஒப்படைக்கும் நோக்கம் அரசுக்குக் கிடையாது என்றும் அவர் கூறினுர். (இ)

# "இந்தியாவில் வங்கிகள் தேசியமயமாக்கப்படா"

## மொரார்ஜி கூறுகிருர்

பம்பாய், ஜுலை 25

இந்தியாவில் வங்கிகள் எதுவும் தேசியமயமாக்கப்படமாட்டாது என்று இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் தெரிவித்துள்ளார்.

பம்பாயில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பு வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினுர்.

குடும்பக்கட்டுப்பாடு பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் கூறியதாவது:

குடும்பக்கட்டுப்பாட்டில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. நாட்டுக்கு அதுமிகவும் அவசியம்தான் ஆனுல் பொதுமக்களின் உதவியுடனும் ஒத்தாசையுடனுமே குடும்பக்கட்டுப்பாடு அமுல் செய்யப்படவேண்டும். (இ)

# சுந்தரர் குருபூசை

யாழ்ப்பாணம் செவ்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் வழமைபோல் இவ்வருடமும் திருக்கேதீஸ்வரத்தில் சுந்தரர் குருபூசை கொண்டாடினர்.

இதனையொட்டி, விசேட நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# புதிய தலைவர்

கொழும்பு, திங்கள்

இலங்கை போக்குவரத்து சபை தலைவராக திரு. ஏ. ஆர். பி. விஜயசேகரா நியமிக்கப்படுவார் என தெரியவருகிறது.

திரு. விஜயசேகரா 1968 ம் ஆண்டுமுதல் 70 ம் ஆண்டு வரை, இ. போ. ச. தலைவராக கடமையாற்றியவராவர்.

# தமிழ் நாட்டில் மதுவிலக்கு தீவிர அமுல்" எம். ஜி. ஆர். உறுதி

சென்னை, ஜுலை 25

தமிழ்நாட்டில் மதுவிலக்கு தீவிரமாக அமுல்செய்யப்படுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கூறினுர்.

சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினுர்.

திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மேலும் பேசுகையில்கூறியதாவது:-

கள்ளச்சாராயம் காய்ச்சுவோர், சாராயம் எடுத்துச் செல்வோர்ஆகியோர்மீதுகடும் நடவடிக்கை எடுக்கும் அதே வேளையில், இவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படும்.

ஊழலை நாட்டில் எவ்வளவு விரைவில் அகற்றமுடியுமோ அவ்வளவு விரைவில் அகற்றுவதற்கு ஏதுவாக உடன்தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் கூறினுர். (இ)

# விஷமத்தனம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ். மாநகரசபைக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியின் சிலை விஷமிகள் சிலரால் இறக்கி கீழே வைக்கப்பட்டிருந்தது.

பொதுமக்கள் பின்னர் இச்சிலையை தூக்கி உரியஇடத்தில் வைத்தனர். இரவு வேளை நடந்த இவ் விஷமத்தனத்தால் சிலைக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை. (கெ-கூ)

# கல்வி மந்திரிக்கு பாராட்டு

கொழும்பு, திங்கள்

கல்வியமைச்சராக திரு. நிசங்கா விஜயரத்ன நியமிக்கப்பட்டதை அகில இலங்கை அரசாங்க ஆங்கில ஆசிரியர் சங்கம் பாராட்டியுள்ளது

சங்கத் தலைவர் திரு. எம். ஏ ஸ்ரான்லி பெரேரா அனுப்பியுள்ள தந்தியில் பூரண ஆதரவையும், ஒத்துழைப்பையும் சங்கம் வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

# முக்கிய உணவு பொருள்கள் இறக்குமதி செய்யப்படுமா?

## 'பீக்ஸ்' திட்டத்தை அகற்றயோசனை; சைக்கிள்கள் இறக்குமதியாகலாம்

கொழும்பு, திங்கள்

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதுதான் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் முதல் முக்கிய நடவடிக்கையாக இருக்கவேண்டும் என்று மந்திரிசபையின் முதலாவது கூட்டத்தில் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன வற்புறுத்தியதைத் தொடர்ந்து, இதுசம்பந்தமாக உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

வாழ்க்கைச் செலவை எவ்விதம் குறைக்கலாம் என்பது குறித்து விரிவாக ஆராய்ந்து கருத்துக்களை வெளியிட ஒரு குழு உடனடியாக அமைக்கப் பட்டுள்ளது.

நிதிஅமைச்சர் திரு. ரோனி டி மெல, வர்த்தக அமைச்சர் திரு. லலித் அதுலத் முதலி, உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. எஸ். பீ. ஹேரத் ஆகியோர் அடங்கிய குழுவொன்று முதல் மந்திரி சபைக்கூட்டத்திலேயே அமைக்கப்பட்டது.

உணவுப் பொருள்களை குறைந்த விலையில் மக்களுக்கு விநியோகம் செய்வதற்கு வெளிநாடுகளிலிருந்து அவற்றை இறக்குமதி செய்யவேண்டுமா? அப்படியானல், வெளிநாட்டுச் செலாவணி சான்றிதழ் பத்திரத்தை (பீக்ஸ்) வாபஸ்பெறவேண்டுமா என்பது குறித்தும் விசேஷ குழு ஆராயும். 'பீக்ஸ்' திட்டத்தை ரத்துச்செய்ய வேண்டுமென்று சில அமைச்சர்கள் எதிர்பார்ப்பதாக அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த யோசனை ஆலோசனைக்கு எடுக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

மக்களின் அன்றாடத் தேவையான மிளகாய், வெங்காயம், கருவாடு, சீனி, மாவு போன்றவற்றை நியாயமான அளவில் இறக்குமதிசெய்து, குறைந்த விலையில் விநியோகிக்கவேண்டும் என்றும் உள்ளூரில் உற்பத்தியாகும் மிளகாய், வெங்காயம் மற்றும் கருவாடு ஆகியவற்றின் விலையில் அதிகரிப்பு ஏற்படுவது இதன் மூலம் கட்டுப்படுத்தப்படலாம் என்றும் அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

சில உற்பத்தியாளர்கள் தயாரிப்பாளர்கள் மீதான விற்பனவு வரியை குறைப்பது அல்லது ரத்துச்செய்வது பற்றியும் ஆராயப்படவிருக்கிறது.

சைக்கிள்களை இறக்குமதி செய்வது குறித்தும் கவனம் செலுத்தப்படவிருக்கிறது.

போக்கு வரத்து கஷ்டங்களைக் குறைக்குமுகமாகயில், சைக்கிள்களை இறக்குமதி செய்து 30ப ரூபாய்க்கு விற்பனை செய்வது பற்றியும் அரசு கவனம் செலுத்திவருகிறது.

---

## நீண்டகால எம்.பி.யாக.....

கொழும்பு, திங்கள்

இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்திலிருந்து இன்றுவரை தொடர்ந்து எம். பியாக இருக்கும் ஒருவர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவாகும்.

1947-ம் ஆண்டு எம். பியாகத் தெரிவுசெய்யப்பட்ட இவர் கடந்த 30 வருடகாலமாகத் தொடர்ந்து எம். பியாக இருந்து வருகிறார்.

திரு ஆர். ஜி. சேனநாயக்கா, திரு. எம். டி. பண்டா ஆகியோர் 1947-ம் ஆண்டு முதல் 1970-ம் ஆண்டுவரை தொடர்ந்து எம் பி யாக இருந்துவந்தனர்.

1947-ம் ஆண்டு முதல் எம். பி. யாக இருந்துவந்த சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் திரு பீட்டர் கெனமன் ஆகியோர் கடந்த தேர்தலில் தோல்வியடைந்தனர். இவர்கள் இருவரும் தொடர்ந்து 30 வருடங்களா எம். பி யாக இருந்தனர். (ச)

---

"இராஜலிங்கத்தின் வெற்றி

## தமிழினத்தில் பிளவில்லை என்பதை நிரூபித்துவிட்டது"

யாழ்ப்பாணம், செவ்.

"உடுப்பிட்டித் தொகுதி தேசியப் பேரவை உறுப்பினராக திரு. த. இராஜலிங்கத்தை மிகப் பெரும்பாண்மை வாக்குகளால் தெரிவுசெய்ததன் மூலம் உடுப்பிட்டி மக்கள் தமிழ் பேசும் இனத்தின் ஒருமைப்பாட்டை அகில உலகுக்கும் எடுத்துக்காட்டியுள்ளனர், என திரு. த. இராஜலிங்கம் தேசியப் பேரவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டபின், உடுப்பிட்டி தொகுதி மக்களால் அளிக்கப்பட்ட வரவேற்பில் ஆசிரியர் திரு. க. நடராஜா உரையாற்றுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் "சாதியின் பெயரால் இயக்கங்களை நடாத்தி வாழ்வு நடாத்தும் இயக்கங்களுக்கு இவ்வெற்றி பேரிடியாக உள்ளது தீவிர இடதுசாரிகள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் இயக்கத்தினர், திரு. இராஜலிங்கம் தோல்வியுறுவார் என ஆருடம் கூறி வந்தனர். இவரை தோல்வியடையச் செய்ய பல சூழ்ச்சிகளையும் செய்துவந்தனர்.

"இந்நிலையில் பல்லாண்டு காலமாக தமிழ்பேசும் இனத்தின் மீது சுமத்தப்பட்ட களங்கத்தை துடைத்து சாதி வெறியை முறியடித்து உடுப்பிட்டிமக்கள் வெற்றி கண்டுள்ளார்கள்.

வடபகுதியில் இளைஞர்கள் ஓரணியில் அதன் தீர்வுகாலை முடிவுசெய்தவிட்டதால் சாதியடிப்படையில் பிளவுகளுக்கு இடமில்லை. பின்தங்கிய ஒரு சமுதாயத்தை வைத்து அரசியல்லாபம் தேடிவந்த இயக்கங்களை மக்கள் இனம்கண்டு செயல் பட்டு விட்டார்கள். தொடர்ந்தும் தமிழினத்தில் பிளவுகள் இல்லையென்பதற்கு இராஜலிங்கத்தின் வெற்றி சான்றாகும்.

உடுப்பிட்டித் தொகுதி தேசியப்பேரவை உறுப்பினர் திரு. த இராஜலிங்கம், தன்னைத் தேர்ந்தெடுத்த சகல மக்களுக்கும் நன்றி கூறினர். (கெ-உ)

மலேஷியன் கைமார்க்
சாம்பிராணி
கிடைக்குமிடம்:
சென்ற் அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
லிமிட்டெட்
கொழும்பு-10
போன்: 24261—5

---

ஐ. தே. க. வெற்றி:

## உப- தபாலதிபர் சங்கம் பாராட்டு

யாழ்ப்பாணம், செவ்வாய்

ஐக்கிய தேசியக்கட்சி வெற்றி குறித்து அகில இலங்கை உப-தபாலதிபர்கள் சங்கம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. ஐ. நடராசா தமது பாராட்டுச் செய்தியில் கூறியிருப்பதாவது:- "இலங்கையின் சரித்திரத்தில் எதிர்க் கட்சிகளின் பலம் அதிகமில்லாமல் இதுவரை வெற்றியீட்டியமை மக்கள் ஐ. தே. க. தலைவர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவின் தலைமையில் வைத்திருந்த பெருமதிப்பேயாகும். மக்கள் அமைதியான முறையில் ஆட்சி மாற்றத்தை விரும்பி செயல்பட்டுள்ளமையினால் மக்களது அபிலாசைகளுக்கு மதிப்பளித்து ஆட்சிசெய்யுமாறு கோருகின்றேம்" எனக் குறிப்பிட்டுள்ளார். (கெ-உ)

---

கம்பளை துப்பாக்கிச் சூடு:

## முன்னாள் எம்.பி றிமாண்டில்

கம்பளை, திங்கள்

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து முன்னாள் எம். பி. திரு. டி. எம். ஜெயரத்ன றிமாண்டில் வைக்கப் பட்டுள்ளார்.

திரு. ஜெயரத்னவின் இல்லத்தைக் கடந்து ஒரு கோஷ்டியினர் சென்றபோது அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் இச்சம்பவத்தின்போது ஒருவர் கொல்லப்பட்டதாகவும் மற்றும் நால்வர் காயமடைந்ததாகவும் இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட கம்பளை முன்னாள் எம். பி. திரு. டி. எம். ஜெயரத்ன கம்பளை நீதவான் முன் ஆஜர்செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப் பட்டார்.

### பெண்மணியும் சுட்டுக் கொலை

கம்பளையில் துப்பாக்கிச் சூட்டுக்கு ஒரு பெண்ணும் பலியாகியுள்ளார்.

### தீ மூட்டிக் கொலை

கடவத்தைப் பொலிஸ் வட்டாரத்தில் ஒருவர் வீட்டிற்குள் வைத்துத் தீ மூட்டிக் கொல்லப்பட்டார். இருவர் வீட்டிற்குள் வைத்துக் கதவைப் பூட்டித் தீ மூட்டப்பட்டனர்.

### கேகாலையில் இருவர் கொலை

கேகாலை மாவட்டத்தில் இருவர் வாளால் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். பலர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

### பொல்லால் அடித்துக் கொலை

மகர தொகுதியில் ஒருவர் பொல்லால் அடித்துக் கொல்லப்பட்டதாகக் கண்டிப்பொலிசாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

மினுவாங்கொடை, திவுலப்பிட்டியா ஆகிய பகுதிகளிலும் கத்திக் குத்து, வாள் வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. (க)

---

"தரமுயர்வால் பதவியிழந்த

## தபாலதிபருக்கு வேலை வழங்குக"

யாழ்ப்பாணம், செவ்வாய்

அனலைதீவு உபதபால் நிலையம் தேர்தலுக்கு மூன்றுதினங்களுக்கு முன் அமைச்சர் திரு. செ. குமாரசூரியரால் தரமுயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து அங்கு 27 ஆண்டுகளாக உபதபாலதிபராகக் கடமையாற்றிய திரு. ஐ. நடராசா தமது பதவியை இழந்துள்ளார். இவர் இளைப்பாறுவதற்கு இன்னும் நான்கு ஆண்டுகள் உள்ளன. எனவே இந்த நான்கு ஆண்டுகளும் யாழ்ப்பாணப்பகுதியில் காலியான ஓர் இடத்தில் கடமையாற்ற வசதிசெய்க."

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை அகிலஇலங்கை உபதபாலதிபர்களின் தொழிற்சங்கத் தலைவர் திரு. கதிர்காமத்தம்பி புதிய தபால்-தந்தி அமைச்சர் திரு. ஷெல்டன்ஜயசிங்காவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

கடந்த 25 வருடங்களாக அகிலஇலங்கை உபதபாலதிபர்கள் சங்கத்தின் தலைவராக திரு. நடராசா இருந்து வருவதாகவும், இருபத்தேழு வருடங்களாக அவர் உபதபாலதிபராகக் கண்ணியமாகக் கடமையாற்றியுள்ளாரென்றும், அவரது பதவியிழப்புக்கு அரசியலே காரணமென்றும் திரு. கதிர்காமத்தம்பி தமது மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

திரு நடராசாவினுல் உதவியாளராகநியமிக்கப்பட்டிருந்த பெண்மணியும் தமது இத்தபாலகத் தரமுயர்வின் காரணமாகத் தமது வேலையை இழந்துள்ளார். (கெ-அ)

---

## தோல்வி கண்ட தலைவர்கள்

கொழும்பு, செவ்

சமசமாஜக்கட்சியின் ஸ்தாபக உறுப்பினர்களான ஐவர் கடந்த தேர்தலில் தோற்கடிக்கப்பட்டனர்.

எட்டியாந்தோட்டைத் தொகுதியில், சமசமாஜக்கட்சித்தலைவர் டாக்டர் என்.எம். பெரேரா 2517 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டார்.

அகலவத்தை தொகுதியில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா 11,376 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டார். பாணந்துறையில் திரு. லெஸ்லி குணவர்த்தன 11,131 வாக்குகளால் தோற்றார்.

ஆரம்பத்தில் சமசமாஜக்கட்சியிலிருந்து பின் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்த திரு.எம்.ஜி. மெண்டிஸ் ரத்கம தொகுதியில் 6,752 வாக்குகளால் தோல்வியுற்றார்.

அக்குரச தொகுதியில் கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா தோல்வியடைந்தார். கம்யூனிஸ்ட்கட்சித்தலைவரான இவர் சமசமாஜக்கட்சி ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராவர்.

கம்யூனிஸ்ட்கட்சி பொதுச் செயலாளர் திரு. பீட்டர் கெனமன், திரு ரி. பி. சுபசிங்கா ஆகியோரும் கடந்த தேர்தலில் தோல்வியடைந்தனர்.

---

## மகிழ்ச்சி

யாழ்ப்பாணம், செவ்வாய்

வட்டுக்கோட்டைத் தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. தா. திருநாவுக்கரசுவின் அமோக வெற்றி குறித்து இளைஞர் பேரவையினர் தொகுதியின் பல பாகங்களிலும் மகிழ்ச்சி கொண்டாடினர். (உ)

---

## தேசிய அரசு பேரவையில் பல்துறை அங்கத்தவர்கள்

கொழும்பு, திங்கள்

தேசிய அரசுப்பேரவைக்கு 3 டாக்டர்கள் எம். பி. யாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

பாணந்துறையில் டாக்டர் நெவில் பெர்னண்டோவும், கம்புறுப்பிட்டியாவில் டாக்டர் டீ. ஈ. மல்லவராச்சியும், பெலியத்தாவில் டாக்டர் ரஞ்சித் அத்தபத்துவும் தேசிய அரசுப் பேரவைக்குத் தெரிவுசெய்யப் பட்டுள்ளார்கள்.

தேசிய அரசுப் பேரவைக்கு பல சட்டத்தரணிகளும் இம்முறை எம். பிக்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆசிரியர்கள், முன்னாள் ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் மின்சார பொறியியலாளர்கள் இளைப்பாறிய எழுதுவினைஞர்கள் ஆகியோரும் இம்முறை தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

---

## மீண்டும் வேலை

கொழும்பு, திங்கள்

கட்டாய லீவில் சென்றிருந்த தேசிய வீடமைப்பு ஆணையாளர் திரு. எம். ஜி. டி. ஜெயவர்த்தன, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவினுல் மீண்டும் கடமைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

திரு. ஜெயவர்த்தன கடந்த ஆட்சியின்போது வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு. செ. குமாரசூரியரினுல் கட்டாய லீவில் அனுப்பப் பட்டிருந்தார்.

# ஐ. தே. கவுக்கே அதிக வாக்குகள்

கொழும்பு, திங்கள்
ஐக்கிதேசியக் கட்சிக்கே கடந்த பொதுத்தேர்தலில் கூடுதலான வாக்குகள் கிடைத்துள்ளன. ஐ. தே. கட்சிக்கு மொத்தம் 33 லட்சத்து 81 ஆயிரத்து 385 வாக்குகள் கிடைத்தன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு மொத்தம் 17,95,016 வாக்குகளும், சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் உட்பட இடதுசாரிக் கட்சிகள் அனைத்துக்கும் 5,53,832 வாக்குகளும் கிடைத்தன.

ஐக்கியதேசியக் கட்சி, சுதந்திரக்கட்சிக்கும் இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கும் கிடைத்த வாக்குகளை விட 10 லட்சத்து 15 ஆயிரத்து 410 வாக்குகள் கூடுதலாகப் பெற்றுள்ளது.

ஐ. தே. கட்சி 1970ம் ஆண்டு தேர்தலில் பெற்ற வாக்குகளை விட இம்முறை 14 லட்சம் வாக்குகள் கூடுதலாகப் பெற்றுள்ளன.

## நீதி நிர்வாகத்துறையில் பெரும் மாற்றங்கள்

கொழும்பு, திங்கள்
நீதி நிர்வாக சட்டத்தை மக்களுக்கு உதவக்கூடியமுறையில் அமைக்கப்போவதாக புதிய நீதிஅமைச்சரும், கல்குடா எம். பி.யுமான திரு. கே. டபிள்யு. தேவநாயகம் தெரிவித்தார்.

முன்னாள் நீதிஅமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்காவினால் நீதிநிர்வாகச் சட்டம் கொண்டுவரப்பட்டது இந்தச்சட்டத்தை சகலருக்கும் பொருத்தமான ஒன்றாக திருத்தி அமைப்பதே தமது நோக்கமாகும் என நீதிஅமைச்சர் திரு. தேவநாயகம் கூறினார்.

இச்சட்டத்திலுள்ள பாதகமான பகுதிகளை திருத்தியமைத்து சீர்செய்யவிருப்பதாகவும் அவர் கூறினார் சகல மக்களுக்கும், நிவாரணமளிக்கும் பணியை தாம் மேற்கொள்ளப்போவதாகவும் அவர் சொன்னார்.

நீதிஅமைச்சர் மேலும்கூறியதாவது: மக்கள் எம்மீது நம்பிக்கை வைத்துள்ளார்கள் பெருமளவு சேவைசெய்யும் நிலையில் நாம் இன்றிருக்கிறோம். மக்களது அபிலாஷைகளை நிறைவேற்றவேண்டியது எமது கடமை. இதை நாம் செய்து நம்பிக்கைக்குப்பாத்திரமாகவிருந்து நீதியை நிலைவைப்போம்.

### நீதி அமைச்சு செயலாளர்

கொழும்பு, திங்கள்
அவிசாவலை மேல்நீதிமன்ற நீதிபதி திரு. பிரிந்தா ரணசிங்கா, நீதிஅமைச்சுசெயலாளராக கடமையாற்றவிருக்கின்றார்.

இவர் மேல்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்படுமுன்னர் கொழும்பு மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றினார்.

மேல்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட சில வழக்குகள், முடிவடைந்ததும், இவர் புதிய பதவியை ஏற்றுக்கொள்வார். முன்னாள் நீதி அமைச்சின் செயலாளர் திரு. நிஹால் ஜெயவிக்கிரமா, தமது ராஜினாமாவைச் சமர்ப்பித்துள்ளார். (க)

......

### அலீஸ் பிரதமருக்கு வாழ்த்து

கொழும்பு, திங்கள்
''இந்நாடு சுபீட்சமும், அபிவிருத்தியும் காண நல்வழியில் இந்நாட்டை வழி நடத்திச் செல்ல இறைவன் அருள் கிட்டட்டும்''

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப். ஏ. அஸீஸ், பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: ''நானும் எனது ஸ்தாபனத்தினரும் உங்கள் வெற்றியை முன்னிட்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். எமது சமூகத்தில் நீண்டகாலமாகக் கஷ்டப்பட்டு வந்துள்ள ஒருபகுதியினர் சம்பந்தமாக, குறிப்பாக தோட்டத் தொழிலாளர் சம்பந்தமாக உங்கள் விஞ்ஞாபனத்தால் கூறப்பட்டுள்ளவற்றை விரைவில் அமுல் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்''

......

### தாக்கப்பட்டார்

வேலணை, திங்கள்
தமிழர் முன்னணி இயக்கத்தைச் சேர்ந்த க. குலேந்திரன் என்பவர் சிலரால் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் அரசியல்தான் இதற்குக்காரணமெனத் தெரியவருகிறது, இது பற்றி ஊர்காவற்றுறைபொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. (அ)

......

### தேவநாயகம் பதவி ஏற்பு

கொழும்பு, திங்கள்
நீதிமந்திரியாகத் தெரிவு செய்யப்பட்ட கல்குடாத் தொகுதித் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு கே. டபிள்யு. தேவநாயகம், உணவு, கூட்டுறவு அமைச்சர் திரு. எஸ். பி. ஹேரத், சமூக சேவை அமைச்சர் திரு. அசோகா கருணாரத்ன ஆகியோர் நேற்று மாலை 4 மணிக்கு ஜனாதிபதி திரு. வில்லியம் கோபல்லவா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றுக்கொண்டனர்.

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்-லதா
வீட்டுக்கு வந்த மருமகள்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி நடித்த
ஹரிச்சந்திரா

சாந்தி யாழ். நகர் போன்: 7642
தினசரி 10-30, 9-30, 6-30, 9-45
Tissa, Malini Fonsega
Jo Suganthe's NEELA நீலா (சிங்களம்)

RIO (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
CRAZY BOYS and
THE QUEEN'S NECKLACE
(Color-Scope)

மகத்தான 2-வது மாதம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மபிரியா
முத்துராமன் - சகுந்தலா
நடித்த
ஸ்ரீதரின் வைரநெஞ்சம்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் — ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

லிடோ போன் 7693
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர் — சுஜாதா
நீ ஒரு மகாராணி

ராஜா (யாழ்நகர்) போன்: 7180
80-வது தினம்
தினசரி 4 காட்சிகள்
தேவரின் திருவருள் (ஈஸ்ட்மன்கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

கடைசிவாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவராம், கீதாஞ்சலி, தர்மலிங்கம், ஸ்ரீதேவி நடித்த
ஜெயேந்திரா மூவிஸ்
காத்திருப்பேன் உனக்காக

REGAL (JAFFNA) Daily: at 4-45, 7-00 & 9-30 p. m. only
NORMAN WISDOM IN
"ON THE BEAT"
FULL COMEDY

83-வது நாள்
ராணி (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ரி. ஆர். ராஜகுமாரி
குலேபகாவலி
30-7-77 முதல்
எம். ஜி. ஆர் - லதா நடித்த
உழைக்கும் கரங்கள்

வெஸ்லி [மானிப்பாய்]
தினசரி 4-30, 7-00 & 9-45 P. M.
BEFORE AND AFTER LOVE
(Strictly for adults)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கலப்பற்ற உயர்ந்தரக ஜே.சி. பால்மாடும் கன்றும் (அதிக பால் தரக்கூடியது) விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். ஐ. சபாரெத்தினம், 115, அரசடி வீதி, சபாஸ்லேன், கந்தர்மடம்.
6715

### பயிற்சி

6 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 01-08-ல் ஆரம்பமாகவுள்ளது. விபரங்களுக்கு; இன்ஸ்டிரியூட் ஒவ் எஞ்ஜினியரிங் ரெக்னோலொஜி, 11/B. ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
6686

யாழ்ப்பாண மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுள்ளது)

### வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்பம்

மேற்படி சங்கத்தில் சேர்ந்துள்ள வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்கு இருக்கின்றது.
மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்.
74/3, அல்பிரட் துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம்.
23-7-77 6711

### பகிரங்க ஏல விற்பனை

வேலணை ப. நோ. கூ. சங்கத்தால் அரிதட்டுக்கள், பவுடர்வகைகள், கிளாஸ்வகைகள், சிமினிவகைகள், பழைய லொறி ரயர்கள், வெற்று றம்கள், (பழையது) சுவீப்பிங் மாவு, மற்றும் சாய்ப்புச் சாமான்கள், எனாமல் அலுமினியப் பொருட்கள், பிடவை வகைகள் முதலானவை 30-7-77 சனிக்கிழமை காலை 10-30 மணியளவில் வேலணை உதவி அரசாங்க அதிபர் மண்டபத்தில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

பொருட்களைப் பார்வையிட விரும்பின் 29-7-77 ம் திகதி காலை 9-00 மணி தொடக்கம் பகல் 12-00 மணிவரை பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்,
வேலணை, 15-7-1977
6713

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### தேவை

தச்சு வேலைகளுக்கு நாளாந்த சம்பள அடிப்படையில், பல வருட அனுபவமுள்ள தொழிலாளர்கள் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் 27-7-1977, 28-7-1977-ந் திகதிகளில் நேரில் வரவும்.

சீநோர் அபிவிருத்தி நிறுவனம்
காரைநகர்

6710

ஈழநாடு
The EELANADU

# எதிர்த்து வாக்களித்தவர்களை வெறுக்க வேண்டாம்!

## வட்டுக்கோட்டை புதிய எம். பி. கோருகிறார்

சங்கானை, திங்கள்

'1948-ம் ஆண்டின் பின்னர் வட்டுக்கோட்டைத் தொகுதியில் ஒற்றுமையாக ஏகோபித்தகுரலில் ஒரு இயக்கத்திற்கு ஆதரவாக மக்கள் வாக்களித்ததை என்னால் மறக்க முடியாது அதேவேளையில் சில பல தனிப்பட்ட காரணங்களுக்காக பல்வேறு இடங்களில் எமக்கு எதிராக வாக்களித்த மக்களை நாம் வெறுக்கக்கூடாது. அவர்களையும் எமது அன்பால் இணைத்து எமது இயக்கத்தில் சேர்த்து எமதுஇலட்சியத்திற்கு அழைத்துச் செல்லவேண்டும்'.

இவ்வாறு வட்டுக்கோட்டைத்தொகுதி தேசிய அரசுப் பேரவைஉறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு சங்கானை மக்களால் தமக்களிக்கப்பட்ட வரவேற்புபசாரத்தில் நன்றி தெரிவித்துப் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் எமது இனத்தில் சாதிப்பாகுபாடு, சமயப்பூசல்கள் இல்லை என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டுமுகமாகவே வெவ்வேறு மதத்தையும் இனத்தையும் சேர்ந்தவர்களை பல்வேறு தொகுதிகளிலும் த. வி. கூட்டணி வேட்பாளர்களாக நியமித்தோம், குறிப்பாக 82 வீதம் பெரும்பான்மைச் சமூகத்தவர்கள் என்று சொல்லப்படுகின்றவர்கள் வாழ்கின்ற உடுப்பிட்டித் தொகுதியில் சிறுபான்மைத் தமிழர் என்று சொல்லப்படுகின்ற சமூகத்தைச் சேர்ந்த நண்பர் இராசலிங்கத்தை த. வி. கூ. வேட்பாளராக நிறுத்தினோம். உண்மையில் நாம் ஒரு விஷப்பரீட்சையை நடத்தினோம். ஆனால் உடுப்பிட்டிவாழ் மக்கள் இந்த விஷப்பரீட்சையில் தமிழ் இனத்திற்கும் அகில உலகிற்கும் வெற்றியைத் தேடிக் கொடுத்திருக்கிறார்கள் இந்தப் பரீட்சையின் முடிவு இதுவரைகாலமும் உடுப்பிட்டித் தொகுதியில் வெற்றிபெற்ற எந்த ஒரு பிரதிநிதியும்பெறாத மிக அதிகப்படி பெரும்பான்மையான பதின்நாலாயிரத்துக்கும் அதிகப்படியான வாக்குகளால் நண்பர் இராசலிங்கம் வெற்றியீட்டினார். இனிமேல் பெரும்பான்மைத்தமிழர் சிறுபான்மைத் தமிழர் என்ற சொற்பிரயோகமே இருக்கக்கூடாது என்பதையும், எல்லோரும் தமிழர்களே என்பதையும் உறுதிப்படுத்தியுள்ளது.

திரு. திருநாவுக்கரசு மேலும் பேசுகையில், எமது ஒத்துழைப்போ ஆதரவோ இன்றி தனியாகவே ஆட்சி நடாத்தக் கூடிய பெரும்பான்மைப் பலம் ஐ. தே. கட்சிக்குண்டு. இந்த நிலையில் நாடாளுமன்றம் கூடும்வரை ஐ தே கட்சியினர் எப்படி நடக்கப் போகின்றனர் என்பது எமக்குத் தெரியாது. எனவே அரசாங்கத்திடமிருந்து எந்த வகையான உதவிகளை உங்களுக்குப் பெற்றுத் தரலாம் என்பதை என்னால் கூற முடியாது. ஆனாலும் அரசாங்க உதவி இன்றியே சில பொருளாதார அபிவிருத்தி வேலை வாய்ப்புத் திட்டங்களை தனிப்பட்ட சில தமிழ் மக்களின் உதவியுடன் செய்வதற்கான திட்டம் என்னிடம் உண்டு. அந்த வகையில் முடிந்தவரை எனது சக்தியை பாவித்து உங்களுக்கு உதவி செய்வேன்.

நாம் தேசிய அரசுப்பேரவை செல்வதுசிறுசிறு சலுகைகளைப் பெறுவதற்காகவல்ல. பெருமையான எமது இலட்சியத்தை போராட்ட மூலம் அடைவதற்காகவே எனவே சிலசலுகைகளுக்காக எமது தன்மானத்தையும் இலட்சியத்தையும் கைவிடாமல் மக்களுக்கு உதவி செய்வதே குறிக்கோளாகும் என்றார்.

மற்றும் சமாதான நீதவான்கள் ஏ இரத்தினசாமி, இ. நடேசன், எஸ். இராசதுரை ஆகியோர் உரையாற்றினர்.

## வன் செயல்கள் மீது பொலிஸார் நடவடிக்கை

சங்கானை, திங்கள் அண்மையில் நடைபெற்ற தேர்தலைத் தொடர்ந்து வட்டுக்கோட்டைத் தொகுதியில் வன்செயல்கள் ஆங்காங்கே தலை தூக்கிவருகின்றன.

வட்டுக்கோட்டை கிழக்கைச்சேர்ந்த சமாதான நீதவான் திரு. கிருஷ்ணர் வைரமுத்து என்பவருடைய வீட்டிற்குள் திடீரென உட்புகுந்த கோஷ்டி ஒன்று அங்கிருந்த விலைமதிப்புள்ள தளபாடங்களை உடைத்து சுக்கு நூறாக்கி ஆட்களையும் தாக்கிச் சென்றனதாம். க.சின்னராசா, ச. கணேசமூர்த்தி ஆகிய இருவரும் தாக்கப்பட்டதாகப் புகார்செய்யப்பட்டுள்ளது.

இது பற்றி சங்கானை பொலிஸ்நிலைய தற்காலிக பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் எஸ். இராசையா விசாரணைகளை மேற்கொண்டார்.

என். கனகலிங்கம், எஸ். சந்தானசேனபால, எம். குணரத்தினம், வி. சாமிநாதன், கே. நடராசா, எஸ். நந்தபாலன் ஆகியோர் சந்தேகத்தின் மீது கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேநேரத்தில் சுழிபுரம் குடக்கனையைச் சேர்ந்த முருகன் தங்கராசா என்பவர் பலத்த கத்திவெட்டுக் காயத்திற்காளாகி அபாயகரமான நிலையில் யாழ் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது சம்பந்தமாக தலைமறைவாகியுள்ள சந்தேக நபர்கள் ஒன்பது பேரை பொலிசார் தேடிவருகின்றனர்.

தேர்தலுக்குமுன் காரைநகர் அராலி, தொல்புரம், சங்கானை மற்றும் சில இடங்களில் நிகழ்ந்த சிறு அசம்பாவிதங்கள், தேர்தல் முடிந்ததைத்தொடர்ந்து வன்செயல்களாக மாறிவிட்டன. இவற்றைத் தவிர்க்கும் பொருட்டு சங்கானை பொலிசார் பந்தோபஸ்து ஏற்பாடுகளைப் பலப்படுத்தியுள்ளனர்.

## ஜே. ஆர். வெற்றிபற்றி பாக். டைம்ஸ் கருத்து

இஸ்லாமாபாத், ஜூலை 25 இலங்கைப்பிரதமர் திரு.ஜே. ஆர். ஜெயவர்த்தன தம்மை எதிர் நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிகளை நம்பிக்கையுடனும் மிகுந்த துணிவுடனும் சமாளிப்பார் என்று பாகிஸ்தான் 'டைம்ஸ்' பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது.

"திருமதி சிறிமாபண்டார நாயக்காவின் அரசாங்கம் நடந்து முடிந்ததேர்தலில் தோல்வி அடையும் என்பது எதிர்பார்க்கப்பட்டது தான். ஆனால் படுதோல்வி அடையும் என்று எவரும் எவரும் எதிர்பார்க்கவில்லை" என்றும் அப்பத்திரிகை கூறியுள்ளது.

படித்தஇளைஞர்களின் வேலையில்லாப் பிரச்னை, சமூக அரசியல் அமைதியின்மை, சர்வதேச சந்தையில் இலங்கைத் தேயிலையின் விலைவீழ்ச்சி ஆகியன திரு. ஜெயவர்த்தனவை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளாகும் எனினும் அவர் இப்பிரச்னைகளை இலகுவில் தீர்த்து விடுவார் என்பது நம்பிக்கை என்றும் அப்பத்திரிகை கூறியுள்ளது. (இ)

## பேராசிரியா பிலியோசா வருகிறார்

யாழ்ப்பாணம், செவ்.

அகில உலகத் தமிழ் ஆராய்ச்சிகளோடு தொடர்புடைய வரும் புதை பொருள் ஆராய்ச்சி வல்லுனரும், இந்தியவியல் ஆராய்ச்சியாளருமாகிய பேராசிரியர் ஜீன் பிலியோசா பிரான்சில் இருந்து இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

இன்று பிற்பகல் திரு. ஜீன் பிலியோசா யாழ். வளாகத்தில் உரைநிகழ்த்துவார். (கு)

## 250 குடிசைகள் நாசம்

சென்னை, ஜூலை 25

இன்று தென் சென்னையில் ஏற்பட்ட ஒரு தீவிபத்தில் 250 குடிசைகள் எரிந்து சாம்பலாகின. 500 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன மந்தவெளி என்ற இடத்தில் இது நடைபெற்றது.

## புதுச்சேரியில் ராஜ்யசபைக்கு முனுசாமி தெரிவு

சென்னை, ஜூலை 25

புதுச்சேரியிலிருந்து ராஜ்ய சபைக்கான ஒரேஒரு இடத்துக்கு நடைபெற்ற தேர்தலில் அ.இ.அ.தி.மு. கழக உறுப்பினர் திரு. வி. பி. முனுசாமி தெரிவு செய்யப்பட்டார். இவருடன் போட்டியிட்ட ஜனதா கட்சி உறுப்பினர் திரு. ராஜாராமுக்கு சட்டசபையில் 14 வாக்குகளும், திரு. முனுசாமிக்கு 16 வாக்குகளும் பதிவாகின.

## எம். ஜி. ஆர்.—

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

டெழுத்து பயிற்சி பெறுவதற்காக மாதம் 150 ரூபாய் உதவித்தொகையை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கைம்பெண்கள் வசதி குறைந்த பெண்களின் பிள்ளைகளுக்கு புத்தகங்கள், உடைகள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாதிரி சமூகநலத் திட்டங்களுக்காக 23 கோடியே 57 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது- குழந்தைகள் மத்தியில் சுகாதார பரிசோதனைகள் நடத்துவதற்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### தமிழ் புலவர்களுக்கு

ஏழைத் தமிழ்ப் புலவர்களுக்கு பணஉதவி செய்வதற்கான அரசு திட்டமொன்றையும் அமைச்சர் அறிவித்தார்.

கைவிடப்பட்ட பரிசுத்திட்டம் சில மாற்றங்களுடன் மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வரப்படும் என்று அறிவித்த திரு. மனோகரன் இது மக்கள் நலனுக்காகப் பயன்படுத்தப்படும் என்றார்.

'பரிசு கிடைத்தால் வீட்டுக்கு, கிடைக்கா விட்டால் நாட்டுக்கு' என்று முன்னர் அமரர் அண்ணா கூறியதை அமைச்சர் நினைவூட்டினார்.

வணிகப் பயிர்கள் மீதான தீர்வை ரத்து செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமேல்சபைக்கு அ. தி. மு. கழக உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் இன்று சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார். சபைத் துணைத்தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் இதனை சபையில் அறிவித்தார்.

நிதியமைச்சர் திரு. மனோகரன் மேல்சபையில் இன்று நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்து சுருக்கமான உரை நிகழ்த்தினார்.

## தலைவர் ராஜினாமா

யாழ்ப்பாணம், செவ்.

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு ரி. பி. முருகையாவும், உபதலைவர் திரு. இ. பசுபதியும் தமது பதவிகளை நேற்று இராஜினாமாச் செய்துள்ளனர் என்று அறியப்படுகின்றது. (கு)

## வவனியா மோதலில் 60 பேர் கைதாகி விடுதலை

வவனியா, திங்.

வவனியாவில் இரு கோஷ்டியினருக்கிடையே ஏற்பட்ட மோதலைத்தொடர்ந்து 60பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இச்சம்பவத்தின்போது பலர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மதவாச்சியிலிருந்து பஸ் வண்டி ஒன்றில் வந்ததாகக் கூறப்படும் ஒரு கோஷ்டியினர் வவுனியா பஸ் நிலையத்தில் இறங்கி அங்கு நின்றபிரயாணிகளை தாக்கியதாகக் கூறப்படுகிறது.

உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்த வவனியா பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ரி. எஸ். டி. சில்வா, குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ்இன்ஸ்பெக்டர் வி. கந்தசாமி ஆகியோர் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

விசாரணையின் பின் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 60 பேரும், பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் மதவாச்சி வரை கொண்டுபோய் அங்கு விடப்பட்டனர். (க)

### அமைச்சரின்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு வருவது என் கடமையாகும். பொதுச் சொத்துக்களை மக்கள் சேதப்படுத்துவது கவலையளிக்கிறது. இப்படியான செயல்களை கைவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

### தமிழ்மொழி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களையும், தங்களுக்கு ஏற்படுத்தப்படும் வன்செயல்களையும் எண்ணி மனம் கொதிக்கிறார்கள்.

"பொருளாதாரம் காலநேரத்திற்கேற்பச் சுரண்டப்படுவதைச் சகிக்கமுடியாமலும், தமிழ்ப் பிரதேச அபிவிருத்தி வேலைகள் உரிய முறையில் கவனஞ் செலுத்தப்படாததாலும், தொழிற்சாலைகள் தேவைக்கேற்ப இல்லாமையாலும், தமிழ் வாலிபர்கள் விரக்திகொண்டுள்ளனர். அவர்களை உரிய முறையில் பயன்படுத்தி வேலைவாய்ப்புக் கொடுத்து, பறிபோன தமிழ் ஈழப் பிரதேசத்தை மீட்டெடுத்து, வருங்காலத் தமிழர்களை உரிமையோடு வாழ வழிசெய்யக்கூடிய, தமிழ் ஈழக் கோரிக்கையைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

"தமிழ் மக்கள் தங்களுக்கு சோற்றிலும் பார்க்கச் சுதந்திரம்தான் வேண்டும் என்கிறார்கள். தற்போது தமிழ் மக்கள் தமது ஆளப்படும் நிலையைப் புரிந்து கொண்டு தமக்கு சுதந்திர தமிழ் ஈழம்தான் தமக்கு வேண்டும் என்ற தமது எண்ணத்தை வாக்குகளால் உணர்த்தி விட்டனர். (இ)

### இளைஞர்களுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைதியாகவும் இருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்

இவ்வாறு திரு. சிவசிதம்பரம் தனது வேண்டுகோளில் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

### கலவரப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டநேரமும் குறைக்கப்பட்டுள்ளது.

கண்டி, கேகாலை பகுதியிலும், உதவி அரசாங்கப் பகுதிகளான திவுலுப்பிட்டிய, நித்தம்புல மகியங்கன ஆகியஇடங்களில்ஊரடங்குச்சட்டநேரம் குறைக்கப்பட்டுள்ளது. இங்கு இரவு 10 மணிமுதல் அடுத்த நாள் காலை 4 மணிவரை மாத்திரமே ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும்.

### மன்னார்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் அவ்வாறு எதுவித சம்பவமும் நிகழவில்லையென்று திரு. சூசைதாசன் கூறியதாகவும் தெரிவித்தார். கிளிநொச்சிப் பகுதியில் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பகுதியில் பரவியுள்ள செய்தியில் உண்மையில்லையென்றும் திரு. ஆனந்தசங்கரி தெரிவித்தார். கிளிநொச்சியில் பூரண அமைதி நிலவுவதாக அவர் தெரிவித்தார். [கு]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 26ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.